ரெடிங் தமிழ் கல்விக்கூடம்

Reading Tamil School

2019/2020

# O Level தமிழ்

## வினாத்தாள் 2

## பயிற்சி 2

பெயர் ______________________________

www.readingtamilschool.co.uk

admin@readingtamilschool.co.uk

1. **பின்வரும் பந்தியை ஆங்கிலத்தில் மாற்றி எழுதவும்.**

இரண்டு பிள்ளைகள இரண்டு பூனைக்குட்டிகள வேண்டும் என்று கேடடார்கள். ஆனால் அவர்களுடைய தாத்தா பாட்டி ஒரு பூனைக்குட்டி வாங்கிக் கொடுத்தனர். அவர்கள் மிகவும் சந்தோஷமாக இருந்தார்கள். பூனைக்குட்டி மிகவும் சிநேகிதமாக இருந்தது. யாராவது தூக்கி வைத்துக்கொண்டால் அதற்கு மிகவும் பிடித்தது . மீன் சாப்பிடுவதற்கும் கயிற்றை துரத்தி துரத்தி பிடிப்பதற்கும் பூனைக்குட்டிக்கு மிகவும் பிடித்தது. பூனைக்குட்டி வீட்டிலும் தொடடத்திலும் எங்கே போனாலும் பிள்ளைகள் இரண்டு பேரும் அதை பின்னாலேயே போய்க்கொண்டு இருந்தார்கள் .

பிள்ளைகளுக்கு பூனைக்குட்டியை பார்த்துக்கொள்ளும் எல்லா வேலைகளையும் செய்ய வேண்டும் என்று தாத்தா பாட்டி எச்சரித்தார்கள். ஒரு வாரத்துக்கு (கிழமைக்கு) பிராகு பூனைக்குட்டியை பார்த்துக்கொள்வது கஷ்டம் என்று தெரிந்து கொண்டனர். பிள்ளைகள் களைப்பாக இருந்தாலும் பூனைக்குட்டியை வெளியில் நடக்கக் கூட்டிக்கொண்டு போய் வருவது, பூனைக்குட்டிக்கு நல்ல உணவு கொடுப்பது ஆகியவற்றுக்கு பிறகு அதிகம் சுத்தம் செய்ய வேண்டி இருந்தது. தாத்தா பாட்டியிடம் இரண்டாவது பூனைக்குட்டி கேட்க வேண்டாம் என்று தீர்மானம் செய்தார்கள்.

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

ரெடிங் தமிழ் கல்விக்கூடம் O Level தமிழ்

2. **தமிழில் மாற்றி எழுதவும்.**

The girl was tired when she woke up to go to school. She had stayed awake into the early hours to finish her homework to hand in that morning. She ate breakfast quickly, then got dressed and cleaned her teeth.

Her room was a mess. There were clothes and magazines everywhere. She had not tidied up as she was trying to complete the homework. Picking up her bag, she looked around for the homework. It was not on her desk. She started to feel worried.

She moved a pile of clothes from the bed onto the floor. But there was no work on her bed either. Anxiously, she threw the books off her chair and kicked some scarves out of the way. She still could not find her homework.

At last, she saw some papers under the bed. Grabbing them, she breathed a sigh of relief, and put them in her bag.

ரெடிங் தமிழ் கல்விக்கூடம் - O Level தமிழ்

ரெடிங் தமிழ் கல்விக்கூடம் - O Level தமிழ்

**Section B – Reading Comprehension**

Read the following passage carefully and then answer, briefly and in **Tamil**, **Questions 1–10**. You should use your own words as far as possible.

ஒரு வயதான பெண்மணி தன மகன் வெளிநாட்டுக்கு போன பிறகு அந்த வீட்டில் தனியாக இருக்க மிகவும் பயப்படடார். ஆனால் அவருக்கு வீட் டைக் காலி செய்து விட்டு வெளிநாட்டுக்கு போய் தன மகன் அல்லது மகளுடனும் இருக்க விருப்பமில்லை. வீட்டின் பின் புறம் இருக்கும் சிறிய தோட்டத்திற்கு தண்ணீர் விடுவது, வங்கிக்கு போய் பணம் கட்டுவது, கடைகளுக்கு தனியாக போய் சாமான்கள் வாங்குவது ஆகிய வேலைகள் அவருக்கு பிடிக்காவிடடாலும் அவளுடைய கணவர் செய்த சில வேலைகளைத் தான் கற்று கொள்ள வேண்டும் என்று தீர்மானம் செய்தார். முதலில் மின்சாரத்திற்கு தவறாக வங்கியில் பணம் கொடுத்தல், சமையல் அறையில் குழாயை மூடும்போது உடைத்தல் ஆகிய தவறுகளைச் செய்தார். ஆனால் முதலில் அவர் சில தவறுகள் செய்தாலும் எப்படியும் கற்றுக்கொள்ள வேண்டும் என்று தீர்மானம் செய்தார். பிறகு தன மகனுக்கு தெரிந்த வேலை செய்பவரை தொலைபேசியில் கூப்பிடடார். அந்த பெண்மணிக்கு எட்டாதபடியால் வீட்டின் மாடிப்படியில் மேலே இருக்கும் லைற் பல்பை மாற்றுவது, சமையல் அறையில் உள்ள குழாயை சரி செய்வது, குளிக்கும் அறையில் உள்ள பூட்டை சரி செய்வது. ஆகிய முக்கிய வேலைகளை எல்லாம் சரி பண்ணச் சொல்ல வேண்டும் என்று எழுதிக் கொண்டார். வேலை செய்பவர் வந்து எல்லா வேலைகளையும் ஒரு மணி நேரத்தில் முடித்து விடடார்.

வேலை செய்தவர் பணம் வேண்டும் என்று கேட்ட போ து தான் தன்னிடம் பணம் இல்லை என்று ஞாபகம் வந்தது. ஆனால் அவருடைய மகன் சில சமயங்களில் ஒரு காசோலை (செக்) கொடுப்பார் என்றும் ஞாபகம் வந்தது. அவர் இதற்கு முன்னாள் காசோலை (செக்) எழுதாத படியால் தன்னுடைய மகன் இதற்கு முன்னால் எழுதிய ஒரு காசோலையை (செக்கை) பார்த்து முதலில் வேலை செய்பவரின் பெயர், கொடுக்க வேண்டிய பணம் கடைசியில் தன கையெழுத்து என்று மெதுவாக ஒவ்வொன்றாக எழுத ஆரம்பித்தார். பிறகு எல்லாம் சரியாக இருக்கிறதா என்று பார்த்தார். பிறகு செக்கை வேலை செய்தவரிடம் கொடுத்து சரியாக இருக்கிறதா என்று பார்க்க சொன்னார். வேலை செய்தவர் எல்லாம் சரியாக

ரெடிங் தமிழ் கல்விக்கூடம் - O Level தமிழ்

இருக்கிறது என்று சிரித்துக்கொண்டே சொன்னார். அந்த பெண்மணி மிகவும் பெருமிதத்துடன் இது தான் அவர் எழுதிய முதல் காசோலை (செக்) என்று கூறினார். காசோலை கொடுப்பதற்கு முன்னால் பல்பு மாற்றியது ,குழாயை சரி பண்ணியது, குளிக்கும் அறையில் பூட்டை மாற்றியது - எல்லா வேலைகளையும் சரியாக செய்து இருக்கிறானா என்று பார்த்தார். பிறகு வேலை செய்தவருக்கு நன்றி கூறி விட்டு காசோலையை கொடுத்தார், பிறகு அவனை போகலாம் என்று கூறினார். வேலை செய்தவர் என்ன வேலை செய்ய வேண்டுமென்றாலும் தன்னை கூப்பிடலாம் என்று சொன்னான். வேலை செய்தவர் அந்த பெண்மணியிடம் அடுத்த தடவை தான் வரும் பொழுது பல்ப்பை எப்படி மாற்றுவது என்பதை சொல்லிக்கொடுப்பதாகவும் கூறினார்.

வேலை செய்தவர் போன பிறகு அந்த பெண்மணி ஒரு கோப்பை காப்பி போட்டு அதை குடிப்பகுதற்கு தன் ஆடும் நாற்காலியில் அமர்ந்து கொண்டார். இப்பொழுது தான் முதல் தடவை அந்த பெண்மணிக்கு தன்னால் தனியாக இருக்க முடியும் என்ற தன்னம்பிக்கை வந்தது.

ரெடிங் தமிழ் கல்விக்கூடம் - O Level தமிழ்

1. வயதான பெண்மணி வீட்டில் தனியாக இருக்க ஏன் பயப்படடார்?

________________________________________

________________________________________

2. அவருக்கு எந்த வேலைகள் செய்யப் பிடிக்காது?

________________________________________

________________________________________

3. ஆரம்பத்தில் அவர் என்ன தவறுகள் செய்தார்?

________________________________________

________________________________________

4. வேலை செய்பவர் என்ன வேலைகள் செய்தார்?

______________________________________________________________________________

______________________________________________________________________________

5. அவர் எவ்வளவு நேரம் வேலை செய்தார்?

______________________________________________________________________________

______________________________________________________________________________

6. அந்தப் பெண்மணி செக்கை எப்படி எழுதினார்?

______________________________________________________________________________

______________________________________________________________________________

7. அந்த பெண்மணி செக்கை எழுதி முடித்த பிறகு அவரது உணர்ச்சிகள் எப்படி இருந்தன? ஏன்?

______________________________________________________________________________

______________________________________________________________________________

8. வேலை செய்பவர் அந்தப் பெண்மணியிடம் என்ன கூறினார்?

______________________________________________________________________________

______________________________________________________________________________

9. வேலை செய்பவர் போன பிறகு அந்தப் பெண்மணி என்ன செய்தார்?

______________________________________________________________________________

______________________________________________________________________________

10. அந்தப் பெண்மணி தன்னைப் பற்றி என்ன நினைத்தார்?

______________________________________________________________________________

______________________________________________________________________________

ரெடிங் தமிழ் கல்விக்கூடம் - O Level தமிழ்

ரெடிங் தமிழ் கல்விக்கூடம்
Reading Tamil School